தமிழ்நாடு 1974-ம் ஆண்டு கைத்தறித் துணிகள் (உற்பத்தி பகிர்ந்து அளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு மத்திய சட்டத்திற்கும் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் முரணாக இருப்பதாகவும் அதனால் அதை சட்டப் பேரவை விவாதிப்பது முறைதானா என்பது குறித்து

மத்திய அரசுக்கு கொஞ்சம் தைரியம் வரவேண்டும், துணிவு வரவேண்டும். ஆலை முதலாளிகள் இருப்பார்கள். எதிர்ப்பார்பார்கள். 206 ஆலை முதலாளிகள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். நெசவாளர்கள் 20 லட்சம் பேர்கள். அந்த நெசவாளர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பது நம் ஆசை. மத்திய அரசு நிச்சயம் நம்மோடு ஒத்துழைக்கும் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசியலமைப்புச் சட்டப்படி இப்படிப் பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டுவரலாமா என்பதைப் பற்றி பேரவைத் தலைவர் எந்தவிதமான தீர்ப்பும் அளிப்பதில்லை என்று முடிவு எடுத்துக்கொண்டோம்.

'It is the accepted practice in Lok Sabha that the Speaker does not give any ruling on a point of order which raises the question whether a Bill is constitutionally within the legislative competence of the House. It is for the House itself to decide such matters not on a separate motion to that effect but indrectly on the motion that is then before the House in regard to a Bill.'

என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். நமது அவையில் 1956-ல் இப்படிப்பட்ட ஒரு கேள்வி எழுப்பப்பட்டு அப்போது பேரவைத் தலைவராக இருந்த திரு. சிவ ஷண்முகம் பிள்ளை அவர்கள் If it has been reserved for the consideration of the President..............

என்று தலைவர் அனுமதி பெற்று கொண்டுவரக்கூடாதா என்ற கேள்வி எழுப்பப் பட்டு அவர்கள் சொல்கிறார்கள், It did not prevent the state legislative from passing such a legislation.

என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். ஆகவே, இதில் எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு கைத்தறித் துணிகள் (உற்பத்தி, பகிர்ந்து அளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு கைத்தறித் துணிகள் (உற்பத்தி, பகிர்ந்து அளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

1974 ஏப்ரல் 9]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

. . . . . .

(4) அறிவிப்புகள்-தொடர்ச்சி.

(ஆ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ் நாடு 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(முற்பகல் 10-30)

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்-தொடர்ச்சி.

(ஆ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.